வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
ந.க.எண். 3761 /ஆ5 /2023 நாள் : 20.01.2024

பொருள் : திருக்குறள் மாணவர் மாநாடு 2024–வேலூர் மாவட்டம் –விருதுநகர் மாவட்டத்தில் "தீராக்காதல் திருக்குறள் "என்ற திட்டத்தின் கீழ் திருக்குறள் மாநாடு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது–தமிழ்த் திறனறித் தேர்வு –2023 வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களின் இரு நாட்கள் தங்கி மாநாட்டில் பங்கேற்பது –சார்பு

பார்வை: விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித ந.க.எண். A4 /A–117/85/2023 நாள் : 18.01.2024

--------

பார்வையில் காணும் கடிதத்தின் படி,விருதுநகர் மாவட்டத்தில் "தீராக்காதல் திருக்குறள் " திட்டத்தின் கீழ் தமிழ்த் திரனறிவுத் தேர்வு 2023ல் வெற்றி பெற்ற மாணவ /மாணவியர்களுக்கு 02.02.2024 மற்றும் 03.02.2024 ஆகிய தேதிகளில் திருக்குறள் மாணவர் மாநாடு –2024 என்ற நிகழ்வு மாவட்ட நிர்வாகத்தால் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு,நிதியுதவி பெறும் மற்றும் மெட்ரிக் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தமிழ்த் திறனறித் தேர்வு 2023ல் வெற்றி பெற்ற மாணவ /மாணவியர்களுக்கு பல்வேறு போட்டிகள் இணைப்பிலுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி நடத்தப்பட்டுள்ளது. இப்போட்டிகளில் பங்கேற்க விருப்பம் உள்ள மாணாக்கர்களின் பெயர்பட்டியலை இணைப்பிலுள்ள அட்டவணை 1–ல் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.

மேலும் மாவட்ட அளவில் சிறுகதை எழுதுதல் போட்டி (3 பக்கங்களுக்கு மிகாமல்) மற்றும் குறளோவியம் –ஓவியம் வரைதல் போட்டிகளை பள்ளியளவில் (தமிழ் திறனறித் தேர்வு 2023–ல் வெற்றி பெற்ற மாணாக்கர்களும் இதர உயர்நிலை மேல்நிலை வகுப்பு மாணாக்கர்களும் கலந்து கொள்ளலாம்) நடத்தி சிறப்பாக சிறுகதை எழுதிய முதல் இரண்டு மாணவர்கள் மற்றும் சிறப்பாக ஓவியம் வரைந்த முதல் இரண்டு மாணவர்களை பள்ளி வாரியாக தேர்வு செய்து இணைப்பிலுள்ள அட்டவணை 3–ல் பூர்த்தி செய்து 22.01.2024 அன்று பிற்பகல் 2.00 மணிக்குள் அனுப்புமாறு அனைத்து அரசு,நிதியுதவி பெறும் மற்றும் மெட்ரிக் பள்ளி தலைமை ஆசிரியர்கள் /முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு : பார்வை கடித நகல்

//ஓம்.செ.மணிமொழி //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
அனைத்து அரசு /அரசு நிதியுதவி /மெட்ரிக் பள்ளித் தலைமையாசிரியர்கள் /முதல்வர்கள், வேலூர் மாவட்டம்

நகல்
வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை /தனியார் பள்ளிகள் ) தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.